# மெட்ரோ ரெயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம்

## 1,098 பேர் பயனடைந்தனர்

சென்னை, பிப்.29-
சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மற்றும் அப்பல்லோ மருத்துவமனை இணைந்து கடந்த 24-ந்தேதி முதல் மெட்ரோ ரெயில் பயணிகளுக்கு இலவச மருத்துவ முகாமை நடத்தி வந்தது. நேற்றுடன் இந்த மருத்துவ முகாம் முடிவடைந்தது.

சென்டிரல், ஏஜி.டி.எம்.எஸ்., சைதாப்பேட்டை, எல்.ஐ.சி, திருமங்கலம், வடபழனி,வண்ணாரப்பேட்டை, ஈக்காட்டுத்தாங்கல், ஆயிரம் விளக்கு, அண்ணா நகர் கோபுரம்,செனாய்நகர் ஆகிய மெட்ரோ ரெயில் நிலையங்களில் காலை 8 மணி முதல் இரவு 7 மணி வரை நடைபெற்ற இந்த முகாமில் மெட்ரோ ரெயில் ஊழியர்கள், பொதுமக்கள் என 1,098 பேர் பங்கேற்று பயனடைந்தனர். இதில் ரத்த அழுத்தம், ரத்த சர்க்கரை பரிசோதனை செய்யப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.